# குழித்துறை நகராட்சி

## குழித்துறை நகர்மன்றத்தின் 20-05-2022 வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற்ற சாதாரணக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்.

### நகர் மன்ற தலைவர் திரு.பொன். ஆசைத்தம்பி அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்

1) மார்த்தாண்டம் காய்கறி சந்தை முதல் நகராட்சி எல்கை முடியும் வரை உள்ள வடிகால் சரி செய்து சிலாப் அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 92 - (1) தீர்மானிக்கப்பட்டது.**

2) வார்டு எண்.14-ல் சமுத்திரம் என்பவர் வீட்டின் முன்பக்கம் இருக்கும் மின்கம்பத்தில் CFL விளக்கு அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 92 - (2) தீர்மானிக்கப்பட்டது.**

### 5-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.S. ஆட்லின் கெனில் கொண்டு வரும் தீர்மானம்

1) 5-வது வார்டு உட்பட்ட பி.எஸ்.என்.எல். அலுவலகத்திற்கு அருகில் திரு.மா. ராஜீ அவர்களின் வீட்டின் அருகில் சிறுமின்விசை குடிநீர் தொட்டி அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 93 – (1) தீர்மானிக்கப்பட்டது.**

2) 5-வது வார்டு உட்பட்ட நரியன்விளை கழுவன்திட்டை ரோட்டில் திரு. நடராஜன் அவர்களின் வீட்டிற்கு செல்லும் பாதையில் உள்ள மின்கம்பத்தில் தெருவிளக்கு அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 93 – (2) தீர்மானிக்கப்பட்டது.**

## 14-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி. . லில்லி புஷ்பம் கொண்டு வரும் தீர்மானம்

1) வடக்கு தெரு கான்வென்று ரோட்டில் இருந்து வாத்தியர்குடி, சீரான்விளைச் செல்லும் சாலையில் 19-ம் நம்பர் மின் கம்பத்தில் தெருவிளக்கு அமைத்து தர மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 94 – (1) தீர்மானிக்கப்பட்டது.**

2) கொல்லன்விளையில் மக்களுக்கும் 14-ம் வார்டு மக்களுக்கும் ரேசன் வாங்க கடை மார்த்தாண்டத்தில் உள்ளது. அங்கு நல்ல கூட்டம் அதனால் இங்கு உள்ள மக்களுக்கு ஒரு ரேசன் கடை அமைத்து தர மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 94 – (2) தீர்மானிக்கப்பட்டது.**

3) காமனாட்டுவிளையில் 63-ம் நம்பர் 64-ம் நம்பர் மின்கம்பம் போக்குவரத்திற்கு இடையூறாக நிற்பதால் அதனை சாலை ஒரத்தில் மாற்றியமைக்கவும் மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 94 – (3) தீர்மானிக்கப்பட்டது.**

## 16-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.K. இரத்தினமணி கொண்டு வரும் தீர்மானம்

1) குழித்துறை நகராட்சியில் 3 ஆண்டுகளுக்கு மேல் தொடர்ந்து பல ஆண்டுகளாக பணியாற்றும் அலுவலக பணியாளர்கள் மற்றும் வருவாய் பிரிவு பணியாளர்களை பணியிட மாறுதல் செய்ய நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களை கேட்டுக்கொள்ள மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 95 – (1) தீர்மானிக்கப்பட்டது.**

2) NTC டிப்போ பின்புறம் வார்டு 21-ல் இருந்து குடிநீர் நல்லியை எடுத்து மாற்றி அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 95 – (2) தீர்மானிக்கப்பட்டது.**

## 21-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.கே. செல்வகுமாரி. கொண்டு வரும் தீர்மானம்

1) மார்த்தாண்டம் குலசேகரம் சாலையில் வடிகால் ஒடையில் சிலாப் அமைக்க மன்ற தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 96 – (1) தீர்மானிக்கப்பட்டது.**

2) சானல் ரோட்டில் வடிகால் ஒடை சீரமைத்து சிலாப் அமைக்க மன்ற தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 96 – (2) தீர்மானிக்கப்பட்டது.**

### பொருள் எண். 1

குழித்துறை நகராட்சி சொத்துவரி / காலிமனைவரி பொது சீராய்வு செய்வது குறித்து அறிவிப்பினை பொது மக்களிடம் ஆட்சேபனை கேட்டல் தொடர்பாக தினதந்தி பத்திரிக்கையில் 14-04-2022 விளம்பரம் செய்யப்பட்ட வகையில் ரூ.62,025/-க்கான பட்டியல் பெறப்பட்டது. மேற்படி தொகையினை "The Daily Thanthi" நிறுவனத்திற்கு வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.969/2022/அ1.

**மன்றத்தீர்மான எண். 97 - அனுமதிக்கப்பட்டது**

### பொருள் எண். 2

குழித்துறை நகராட்சி வார்டு எண்.15 Block-28-ல் அமைந்துள்ள L.M.S.Girls Higher Secondary School-க்கு கதவு எண்கள் 28-59, 28-59A1, 28-59A2, 28-59A3, 28-59A4, 28-59A5, 28-59A6, 28-59A7, மற்றும் 28-59A8-க்கு வரிவிலக்களிக்க கோரியுள்ளார். மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண். 69/2022/அ1.

**மன்றத்தீர்மான எண். 98 - அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 3</u>**

குழித்துறை நகராட்சி தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 21 வரையுள்ள பகுதிகளுக்கான (1) Boundary Map (2) Ward Map (1 to 21) (3) City facilities (4) District Bounday Map ஆகியவை Google Earth App மூலம் Auto Card KMC file செய்து GIS Mapping செய்யப்பட்டுள்ளது. அதனை admin sbm.org-> geographical information System (GIS) என்ற இணையத்தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. அதற்கான செலவு தொகை ரூ.19700/- SBM மேற்பார்வையாளரால் செலவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி தொகையினை தூய்மை இந்தியா திட்ட மேற்பார்வையாளருக்கு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அ.கு.</u>- மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.2389/2017/அ2.

**மன்றத்தீர்மான எண். 99 - அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 4</u>**

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட மார்த்தாண்டம் காய்கறி சந்தையின் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் (KNMT) 2021-2022-ன்கீழ் பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை மாநில அளவிலான தினசரி செய்தி நாளிதழில் தமிழ் மற்றும் ஆங்கிலத்திலும் ஒப்பந்தப்புள்ளி மலரிலும் விளம்பரம் செய்யப்பட்ட வகையில் ரூ.1,39,230/- NIDUS ADVERTISING AND MARKETING-க்கு என்ற நிறுவனத்திற்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அ.கு.</u>- மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.1967/2021/இ1.

**மன்றத்தீர்மான எண். 100 - அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 5</u>**

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1-ல் அமைந்துள்ள ஜாக்கப் நகர் முதல் நரியன்விளை சாலை வரை தார் சாலை மற்றும் சிமெண்ட் சாலை அமைத்திடும் பணிக்கு 27-04-2022 மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. அவற்றின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு.

1) திரு.சி. ராஜன் மதிப்பீட்டை விட (-) 0.005% குறைவு

2) திரு.பி. ஜஸ்டின்குமார் மதிப்பீட்டை விட (-) 1.17% கூடுதல்

மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.சி. ராஜன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக உள்ளதால் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.- பணியின் அவசரம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.2605/2021/இ1.

**மன்றத்தீர்மான எண். 101 - அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 6</u>**

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு வாகனம் T.N.75AL.6196 Battery பழுதடைந்துள்ளதால் புதிய Battery வாங்குவதற்கு உத்தேச செலவினம் ரூ.8000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
<u>அ.கு.</u>- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.113/2019/இ1.

**மன்றத்தீர்மான எண். 102 - அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 7</u>**

குழித்துறை நகராட்சியால் ஆண்டுதோறும் ஆடி அமாவாசையை முன்னிட்டு வாவுபலி பொருட்காட்சி நிரந்தரமாக நடத்திட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கும் (ந.நி.3) துறை அரசாணை எண்.34, நாள் 22-06-2000-ன்படி நிரந்தர அனுமதி ஆணை வழங்கப்பட்டுள்ளது. அதன்பேரில் நடைபெறவுள்ள 97-வது வாவுபலி பொருட்காட்சி 13-07-2022 முதல் 01-08-2022 வரை நடத்தவும் மற்றும் வாவுபலி பொருட்காட்சியில் கீழ்கண்ட இனங்களை ஒரே இனமாக சேர்த்து ஏற்கனவே 94-வது வாவுபலி பொருட்காட்சி திறம்பட நடத்தப்பட்டது. அதன் அடிப்படையில் தற்போது நடைபெறவுள்ள 97-வது வாவுபலி பொருட்காட்சியில் வரிசை எண்.1 முதல் 12 வரையுள்ள இனங்களையும் ஒரே இனமாக சேர்த்து பொது ஏலம் விட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| 1 | வாவுபலி பொருட்காட்சி திடலில் நுழைவு கட்டணம் வசூல் செய்தல் |
| 2 | நகராட்சி குறிப்பிடும் இடத்தில் மட்டும் பக்கக்காட்சி அமைத்து நடத்தும் உரிமம் |
| 3 | பொருட்காட்சி திடலில் நகராட்சியால் அமைக்கப்பட்டுள்ள இடத்தில் ஒலிபெருக்கியில் மட்டும் விளம்பரம் செய்யும் உரிமம் |
| 4 | நகராட்சி குறிப்பிடும் இடத்தில் கடை அமைத்து ஐஸ் மற்றும் ஐஸ்கிரீம் விற்பனை செய்யும் உரிமம் |
| 5 | நகராட்சி குறிப்பிடும் இடத்தில் கடை அமைத்து குளிர்பானம் விற்பனை செய்யும் உரிமம் |
| 6 | நகராட்சி குறிப்பிடும் இடத்தில் கடை அமைத்து உணவு விடுதி நடத்தும் உரிமம் |
| 7 | நகராட்சி குறிப்பிடும் இடத்தில் கடை அமைத்து அப்பளம் பஜ்ஜி கடை நடத்தும் உரிமம் |
| 8 | நகராட்சி குறிப்பிடும் இடத்தில் பாப்கன் விற்பனை செய்யும் உரிமம் |
| 9 | நகராட்சி குறிப்பிடும் இடத்தில் மட்டும் பானிபூரி அமைத்து விற்பனை செய்யும் உரிமம் |
| 10 | தபால் நிலையம் முன்புள்ள காலியிடத்தில் சிற்றுண்டி அமைத்து நடத்தும் உரிமம் |
| 11 | **97–வது வாவுபலி பொருட்காட்சியில் அமைக்கப்படும் ஸ்டால்களில் உரிமங்களுக்குட்பட்ட பொருட்டுகளை விற்பனை செய்ய கடை வாடகை** |
| 11(அ) | பொருட்காட்சி திடலுக்கு வெளியில், தபால் நிலையம் முன் பக்கம் உள்ள கடைகள் 1 முதல் 11 வரை கடை 1-ன் அளவு 7x5 |
| 11ஆ) | பொருட்காட்சி திடலுக்கு வெளியில், பொதுப்பணி துறை பக்கம் உள்ள கடைகள் 1 முதல் 11 வரை கடை 1-ன் அளவு 7x6 |
| 11(இ) | வேலுத்தம்பி திடலில் அமைக்கப்பட்டுள்ள ஸ்டால் 1 முதல் 20 வரை கடை 1-ன் அளவு 8x6 |
| 11(ஈ) | பொருட்காட்சி திடலுக்குள் உள்ள கடைகள் 1 முதல் 30 வரை கடை 1-ன் அளவு 10x9 |
| 12 | விளம்பர ஸ்டால் 1 அளவு 9x8 |

அ.கு.- 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) வரிசை எண்.1-ல் கண்ட நுழைவு வாயில் கட்டணம் வசூல் சிறுவர்

மற்றும் பெரியவர்களுக்கு தற்போதைய சூழலின் பேரில் நிர்ணயம் செய்யலாம்.

3) மின்கட்டணம், தீயணைப்பு கட்டணம் மற்றும் இதர செலவினங்கள் குத்தகைதாரரை பொறுத்ததாகும்.
4) மேற்படி வாவுபலி பொருட்காட்சி நடத்திட நகராட்சியில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைக்கு ஏற்படும் செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1400/2022/அ2

**மன்றத்தீர்மான எண். 103 -**

(1) **அனுமதிக்கப்பட்டது**
(2) **நுழைவு கட்டணம் சிறியவர்களுக்கு ரூ.5/-ம் பெரியவர்களுக்கு ரூ.10/- நிர்ணயம் செய்து தீர்மானிக்கப்பட்டது-**
(3) **அனுமதிக்கப்பட்டது**
(4) **அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 8</u>**

நகர்மன்ற தீர்மானம் எண்.3826 மற்றும் 3827 நாள் 31-12-2021-ன்படி பொது சுகாதார பணிகளுக்கு தேவையான கிருமி நாசினி பொருட்கள் வாங்கிட தீர்மானிக்கப்பட்டதின்பேரில் தேவையான பொருட்களை கொள்முதல் செய்திட 10-05-2022-ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

1) திரு. தனிஷ்ட்ஸ் நிறுவனம் ஒப்பந்தப்புள்ளித்தொகை ரூ.353500/- திருச்சி
2) திரு. செல்வா சேப்டி நிறுவனம் ஒப்பந்தப்புள்ளித் தொகை ரூ.397300/- திருச்சி.

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1-ல் கண்ட ஒப்பந்தப்புள்ளி குறைவாகவுள்ளது. எனவே குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.3055/2021/H1.

**மன்றத்தீர்மான எண். 104 - அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 9</u>**

நகராட்சிக்கு எதிராக தொடரப்படும் வழக்குகளை, நகராட்சி சார்பில் நீதிமன்றத்தில் வழக்கினை நடத்திட வழக்கறிஞர் ஒருவரை நியமனம் செய்திட வழக்கறிஞர் சங்கம் குழித்துறை அனுப்பட்ட கடிதத்தின்பேரில் கீழ்கண்டவாறு மூன்று விண்ணப்பம் பெறப்பட்டுள்ளது.

1) திரு.D. ஷாஜிகுமார்
   வழக்கறிஞர்.

2) திருமதி.B.J. ஷீலா ஜெயந்தி
   வழக்கறிஞர்.

3) திருமதி.M.D.M. ஷீலா பிரியதர்சினி
   வழக்கறிஞர்.

மேற்படி பெறப்பட்ட விண்ணப்பத்தின் பேரில் வழக்கறிஞர் ஒருவரை தேர்வு செய்திட மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.1066/2022/அ1.

**மன்றத்தீர்மான எண்.105- திரு.D. ஷாஜிகுமார் அவர்களை நகராட்சி வழக்கறிஞராக .அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 10</u>**

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.19-ல் அமைந்துள்ள Divines ஹோட்டல் அருகில் உள்ள கிணற்றில் இருந்து கழிவுநீர் தொட்டி அமைத்து கழிவுநீரை வெளியேற்ற Pipe line இணைப்பை வழங்க ரூ.31,000/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. பணியின் அவசியம் கருதி இப்பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.
அ.கு.- மன்றம் அனுமதி வழங்கலாம்.
ந.க.எண்.1414/2022/இ1.

**மன்றத்தீர்மான எண். 106 - அனுமதிக்கப்பட்டது**

## பொருள் எண். 11

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.5-ல் உள்ள கின்ஸ் ஆஸ்பத்திரியின் எதிரில் அமைந்துள்ள கிணற்றிலிருந்து எலக்ட்ரிசியன் அனி வீடு வரை குழாய் அமைத்து தண்ணீர் வசதி செய்து ரக்கோரி நகர்மன்ற உறுப்பினர் விண்ணப்பித்துள்ளார். அதன்படி தண்ணீர் வசதி செய்வதற்கான ரூ.23,000/-க்கு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. பணியின் அவசியம் கருதி இப்பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.1415/2022/இ1.

**மன்றத்தீர்மான எண். 107 - அனுமதிக்கப்பட்டது**

## பொருள் எண். 12

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான வி.எல்.சி. கலையரங்கம் பராமரிப்பு மற்றும் பழுது பணிக்கென ரூ.4.60 இலட்சம் மதிப்பீட்டில் நகர்மன்ற தீர்மானம் எண்.34, நாள் 31-03-2022 மன்றம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்பேரில் பணியினை செயல்படுத்திட 5-5-2022-ம் நாள் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

1) CRRA General Contrecting Private Limited - மதிப்பீட்டை விட 0.09% குறைவு
2) Thiru.D. Justin Kumar, Contractor - மதிப்பீட்டை விட 0.68% அதிகம்

மேற்படி பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பந்ததாரர் CRRA General Contrecting Private Limited என்பவரின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக உள்ளது. எனவே குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஒப்புகொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

அ.கு.- மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.871/2022/இ1.

**மன்றத்தீர்மான எண். 108 - அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 13</u>**

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட மார்த்தாண்டம் ஆர்.சி.தெருவில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான படிப்பகத்தினை பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள ரூ.65,000/- மதிப்பீட்டிற்கு நகர்மன்ற தீர்மானம் எண்.33, நாள் 31-03-2022 மன்றம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்பேரில் பணியினை செயல்படுத்திட 5-5-2022-ம் நாள் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

1) திரு.சி. ராஜன் - மதிப்பீட்டை விட 0.11% குறைவு
2) திரு.பி. ஜெயசந்திரன்- மதிப்பீட்டை விட 9.51% கூடுதல்

மேற்படி பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பந்ததாரர் திரு.சி. ராஜன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி குறைவாகவுள்ளது. எனவே குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஒப்புகொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
அ.கு.- மன்றம் அனுமதி வழங்கலாம்.
ந.க.எண்.3064/2021/இ1.

**மன்றத்தீர்மான எண். 109 - அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 14</u>**

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான தலைமை நீரேற்று நிலையத்தில் 40KVA Generator 3 எண்ணிக்கை, 45KVA Generator 1 எண்ணம், நகராட்சி அலுவலகத்தில் 15KVA 1 எண்ணம் மற்றும் 30KVA 1 எண்ணம் ஆக மொத்தம் 6 எண்ணிக்கைகள் Generator பழுது ஏற்படும் பொழுது பழுகளை சரிபார்க்கவும் அவ்வப்போது Generator-களை Regular Service செய்வதற்கென்று ரூ.2,95,000/- மதிப்பீட்டிற்கு நகர்மன்ற தீர்மானம் எண்.31 நாள் 31-03-2022 மன்றம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்பேரில் பணியினை செயல்படுத்திட 5-5-2022-ம் நாள் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

1) R.J. Power, Contractor - மதிப்பீட்டை விட 1.60% குறைவு

2) Annai Generator Spare and Service - மதிப்பீட்டை விட 3.06% அதிகம்

மேற்படி பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பந்ததாரர் R.J. Power என்பவரின் ஒப்பந்தப்புள்ளி குறைவாகவுள்ளது. எனவே குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஒப்புகொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
அ.கு.- மன்றம் அனுமதி வழங்கலாம்.
ந.க.எண்.871/2022/இ1.

**மன்றத்தீர்மான எண். 110 - அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 15</u>**

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட மார்த்தாண்டம் பகுதியில் உள்ள மீன் சந்தையில் பொதுகழிப்பிடம் கட்டுவதற்கு ரூ.9.00 இலட்சத்திற்கு நகர்மன்ற தீர்மானம் எண்.32, நாள் 31-03-2022 மன்றம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்பேரில் பணியினை செயல்படுத்திட 5-5-2022-ம் நாள் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

1) திரு.எஸ். பாபு - மதிப்பீட்டை விட (- ) 11.28% குறைவு

2) திரு.பி. ஜெயபிரகாஷ் - மதிப்பீட்டை விட (- ) 10.00% குறைவு

மேற்படி பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பந்ததாரர் திரு.எஸ். பாபு என்பவரின் ஒப்பந்தப்புள்ளி குறைவாகவுள்ளது. எனவே குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஒப்புகொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
அ.கு.- மன்றம் அனுமதி வழங்கலாம்.
ந.க.எண்.870/2022/இ1.

**மன்றத்தீர்மான எண். 111 - அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 16</u>**

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான பொது சுகாதாரப்பிரிவு வாகனம் TN.75J.8227-ற்கு 2022-2023-ம் ஆண்டிற்கு தகுதி சான்று பெறுவதற்கு மேற்படி வாகனத்திலுள்ள பழுதுகள் நீக்கம் செய்யும் பொருட்டு வாகனம் ஆய்வு செய்யப்பட்டு மதிப்பீடு ரூ.1,15,000/- வரப்பெற்றுள்ளது. மேற்படி வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை நீக்கம் செய்யவும் அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- மன்றம் அனுமதி வழங்கலாம்.
ந.க.எண்.2778/2012/இ1.

**மன்றத்தீர்மான எண். 112 - அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 17</u>**

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட பெருந்தெரு விநாயகர் கோவில் சமீபம் உள்ள சிறுபாலம் பழுதடைந்துள்ளதை சரி செய்யும் பணிக்கு ரூ.1,10,000/- மதிப்பீட்டிற்கு நகர்மன்ற தீர்மானம் எண்.3836, நாள் 31-12-2021 மன்றம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்பேரில் பணியினை செயல்படுத்திட 12-05-2022-ல் மறுஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

1) T. Regu - மதிப்பீட்டை விட (- ) 0.21 குறைவு
2) A. Antony - மதிப்பீட்டை விட (+ ) 1.99 அதிகம்

மேற்படி பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பந்ததாரர் திரு. T. Regu என்பவரின் ஒப்பந்தப்புள்ளி குறைவாகவுள்ளது. எனவே குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஒப்புகொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
அ.கு.- மன்றம் அனுமதி வழங்கலாம்.
ந.க.எண்.3064/2021/இ1.

**மன்றத்தீர்மான எண். 113 – அனுமதிக்கப்பட்டது.**

ஒப்பம்/- திரு.பொன். ஆசைத்தம்பி
நகர் மன்ற தலைவர்,
குழித்துறை நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்,
குழித்துறை நகராட்சி.

# குழித்துறை நகராட்சி

## குழித்துறை நகர்மன்றத்தின் 20-05-2022 வெள்ளிக்கிழமை காலை 11.30 மணிக்கு நடைபெற்ற அவசரக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

### நகர் மன்ற தலைவர் திரு.பொன். ஆசைத்தம்பி அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்

1) குழித்துறை நகராட்சியின் முன்னாள் நகர்மன்ற தலைவர் P.P.முனுசாமி நினைவை போற்றும் வகையில் நகர்மன்ற கூடத்தில் அன்னாரின் திருவுருவ படம் திறக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 114 - தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 1**

பொதுசுகாதாரப்பிரிவில் வீடு வீடாக சென்று குப்பைகள் தரம் பிரித்து பெறப்பட்டு வருகிறது. அதற்கு பயன்படுத்தி வந்த BOV. வாகனம் 9-ல் 2 வாகனங்கள் பழுதாகி உள்ளது. இதனால் நகர பகுதியில் சிறிய சந்துகளில் உள்ள குடியிருப்புகளில் குப்பைகள் வாங்க இயலவில்லை. எனவே பழுதான வாகனங்களை பழுது நீக்கம் செய்திடவும், மேலும் நகராட்சி அலுவலக வளாகத்தில் பழுதடைந்த நிலையில் உள்ள 9 தள்ளுவண்டிகளை பழுது நீக்கம் செய்யவும் உத்தேச செலவு ரூ.25,000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.1812/2020/H1.

**மன்றத்தீர்மான எண். 115 - அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 2**

நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவு, வீடு வீடாக சென்று குப்பைகள் தரம் பிரித்து வாங்க பயன்படுத்தப்பட்டு வந்த 9 BOV வாகனங்கள் பழுது ஏற்பட்டு 7 BOV வாகனங்கள் பழுது நீக்கம் செய்யப்பட்டு நல்ல முறையில் இயங்கி வருகிறது. மீதமுள்ள 2 BOV வாகனங்களில் 1 BOV வாகனம் பழுது நீக்கம் செய்ய

இயலாத நிலையில் உள்ளது. மீதமுள்ள 1 BOV வாகனம் பழுது நீக்கம் செய்ய உத்தேச செலவு ரூ.75,000/-க்கு (எழுபத்தி ஐந்தாயிரம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.1812/2020/H1.

**மன்றத்தீர்மான எண். 116 - அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 3</u>**

நகராட்சி பகுதிகளில் உள்ள பொது கழிப்பிடங்களில் (Pay and Use) சுகாதார Napkin இயந்திரங்கள் நிறுவ (SBM) தூய்மை இந்திய திட்டத்தின்கீழ் ODF+ சான்று பெறுவதற்கும், Swachh Surveshan 2-0-ன்படி அனைத்து பொது கழிப்பிடங்களிலும் அடிப்படை தேவைகளை நிவிர்த்தி செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே நகராட்சி பகுதிகளில் உள்ள 4 கழிப்பிடங்களில் Napkin Destroyer நிறுவ வசதியாக 4 Napkin இயந்திரங்களை வாங்குவதற்கும் அதற்காகும் உத்தேச செலவு ரூ.3,00,000/- (மூன்று இலட்சம்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.1812/2020/H1.

**மன்றத்தீர்மான எண். 117 - அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 4</u>**

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான வாகனம் TN.75AL-6196 Scorpio புள் வாட்டர் சர்வீஸ் மற்றும் இதர பழுதுகள் சரி செய்வதற்கு என Derik Motors (P) LTD, Nagercoil மூலம் ரூ.11,447/-க்கு விலைப்புள்ளி பெறப்பட்டுள்ளது. மேற்படி அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான Derik Motors (P) LTD, Nagercoil மூலம் மேற்படி வாகனத்திற்கான பழுதுகள் நீக்கம் செய்யவும் அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.
அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.113/2019/இ1.

**மன்றத்தீர்மான எண். 118 - அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 5</u>**

குழித்துறை நகராட்சியில் உள்ள B.O.C.Street வளாகம், முனுசாமி வளாகம், குழித்துறை வணிக வளாகம் ஆகிய பகுதிகளில் உள்ள கிணறுகளில் முழுவதுமாக சேறு நிரம்பி உள்ளதால் அப்பகுதிகளில் வசிக்கும் மக்கள் கிணறுகளில் உள்ள நீரை பயன்படுத்த முடியாத நிலை உள்ளது. மேலும் இதனை தூர்வாராமல் இருந்தால் கிணற்றின் சுவர்கள் இடிந்து விழும் அபாயம் உள்ள காரணத்தினால் மேற்கூறிய பகுதிகளில் உள்ள கிணறுகளை தூர் வாருவதற்காக ரூ.1,60,000/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணியினை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.1412/2022/இ1.

**மன்றத்தீர்மான எண். 119 - அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 6</u>**

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.21-ல் அமைந்துள்ள SETC Depo மேற்கு பகுதியில் 19M நீளத்திற்கு கழிவுநீர் ஓடை பழுதடைந்து நீர்தேங்கி சுகாதாரக்கேடு விளையும் வண்ணம் உள்ளது. இப்பணியினை மேற்கொள்ள நகர்மன்ற தீர்மானம் எண்.20, நாள் 31-03-2022-ன்படி பணிகள் மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டதின்பேரில் ரூ.1.38 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. பணியின் அவசியம் கருதி நகராட்சியின் நிதி நிலையைப்பொறுத்து பணியினை நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.1413/2022/இ1.

**மன்றத்தீர்மான எண். 120 - அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 7</u>**

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.6-ல் அமைந்துள்ள மேட்டுகிராமம் முதல் கீழ்கிராமம் பகுதியில் E.B. Post No.52-லிருந்து சுமார் 65M நீளத்திற்கு கழிவுநீர் ஓடை பழுதடைந்து நீர்தேங்கி சுகாதாரக்கேடு விளையும் வண்ணம் உள்ளது. இப்பணியினை மேற்கொள்ள நகர்மன்ற தீர்மானம் எண்.7, நாள் 31-03-2022-ன்படி பணிகள் மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டதின்பேரில்

ரூ.4,20,000/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி செலவினத்தை நகராட்சியின் நிதிநிலையினை பொறுத்து வருவாய் நிதியில் இருந்து செலவிட மன்றத்தின் அனுமதிக்கு.
அ.கு.- மன்றம் அனுமதி வழங்கலாம்.
ந.க.எண்.1417/2022/இ1.

**மன்றத்தீர்மான எண். 121 - அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 8**

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.15-ல் அமைந்துள்ள அட்டக்குளம் எதிர்புறம் இசக்கியம்மன் கோவில் பகுதியில் சுமார் 25M நீளத்திற்கு கழிவுநீர் ஒடை பழுதடைந்து நீர்தேங்கி சுகாதாரக்கேடு விளையும் வண்ணம் உள்ளது. இப்பணியினை மேற்கொள்ள நகர்மன்ற தீர்மானம் எண்.16, நாள் 31-03-2022-ன்படி பணிகள் மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டதின்பேரில் ரூ.7 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி செலவினத்தை நகராட்சியின் நிதிநிலையினை பொறுத்து வருவாய் நிதியில் இருந்து செலவிட மன்றத்தின் அனுமதிக்கு.
அ.கு.- மன்றம் அனுமதி வழங்கலாம்.
ந.க.எண்.1418/2022/இ1.

**மன்றத்தீர்மான எண். 122 - அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 9**

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.7-ல் கச்சேரி வார்டு முதல் வழக்கறிஞர் திரு. மோகனன் நாயர் வீடு பகுதியில் அமைந்துள்ள சுமார் 100M நீளத்திற்கு கழிவுநீர் ஒடை பழுதடைந்து நீர்தேங்கி சுகாதாரக்கேடு விளையும் வண்ணம் உள்ளது. இப்பணியினை மேற்கொள்ள நகர்மன்ற தீர்மானம் எண்.8, நாள் 31-03-2022-ன்படி பணிகள் மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டதின்பேரில் ரூ.6.50 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி செலவினத்தை நகராட்சியின் நிதிநிலையினை பொறுத்து வருவாய் நிதியில் இருந்து செலவிட மன்றத்தின் அனுமதிக்கு.
அ.கு.- மன்றம் அனுமதி வழங்கலாம்.
ந.க.எண்.1419/2022/இ1.

**மன்றத்தீர்மான எண். 123 - அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 10</u>**

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.6-ல் அமைந்துள்ள பெருந்தெரு பின்பகுதியில் முத்தாரம்மன் கோவில் முதல் சந்தை பகுதியில் சுமார் 40M நீளத்திற்கு கழிவுநீர் ஒடை பழுதடைந்து நீர்தேங்கி சுகாதாரக்கேடு விளையும் வண்ணம் உள்ளது. இப்பணியினை மேற்கொள்ள நகர்மன்ற தீர்மானம் எண்.7, நாள் 31-03-2022-ன்படி பணிகள் மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டதின்பேரில் ரூ.2.72 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி செலவினத்தை நகராட்சியின் நிதிநிலையினை பொறுத்து வருவாய் நிதியில் இருந்து செலவிட மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.1420/2022/இ1.

**மன்றத்தீர்மான எண். 124 - அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 11</u>**

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.21-ல் உள்ள சிறியகாட்டுவிளை பகுதியில் மேம்பாலம் ஒன்று கட்டடப்பட்டு முடிவடையாமல் மக்கள் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. இதனை முழுமையாக கட்டி மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரும் வகையில் ரூ.19.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. பணியின் அவசியம் கருதி இப்பணியினை நிதி நிலையை அனுசரித்து வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.1423/2022/இ1.

**மன்றத்தீர்மான எண். 125 - அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 12</u>**

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.6-ல் அமைந்துள்ள மேட்டுக்கிராமம் முதல் கீழ்கிராமம் வரையிலான பகுதியில் 165M நீளத்திற்கு காங்கிரீட் ரோடு சேதம் அடைந்து காணப்படுகிறது. இப்பணியினை மேற்கொள்ள நகர்மன்ற தீர்மானம் எண்.7, நாள் 31-03-2022-ன்படி பணிகள் மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டதின்பேரில் ரூ.6.10 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார்

செய்யப்பட்டுள்ளது. இப்பணியினை நகராட்சி நிதிநிலையினை அனுசரித்து பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- மன்றம் அனுமதி வழங்கலாம்.
ந.க.எண்.1420/2022/இ1.

**மன்றத்தீர்மான எண். 126 - அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 13**

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட மார்க்கெட் பகுதியிலுள்ள நுண்ணுயிர் உரம் தயாரிக்கும் மையத்தில் 20 HP Shredder Machine Cum Pulverize இயந்திரம் வாங்கி பொருத்துதல் பணிக்கு 02-12-2021 வேலை உத்தரவு திரு.பி. சுமன் ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்பட்டது. மேற்படி அவர் பொருத்துவதற்கு கொண்டுவரப்பட்ட இயந்திரம் தரமானதாக இல்லை. எனவே மிஷினை 13-05-2022-க்குள் மாற்றி வினியோகம் செய்ய அறிவுறுத்தி 4-5-2022 அன்று இறுதி அறிவிப்பு கடிதம் அனுப்பப்பட்டது. அதற்கும் எந்தவித நடவடிக்கையும் ஒப்பந்ததாரரால் மேற்கொள்ளப்படவில்லை- எனவே பணியின் அவசியம் மற்றும் அவசரம் கருதி இப்பணிக்கான வேலை உத்தரவு இரத்து செய்து மறு ஒப்பந்தப்புள்ளி கோர மன்றத்தின் அனுமதிக்கு.
அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.1485/2021/இ1.

**மன்றத்தீர்மான எண். 127 - அனுமதிக்கப்பட்டது.**

ஒப்பம்/- திரு.பொன். ஆசைத்தம்பி
நகர் மன்ற தலைவர்,
குழித்துறை நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்,
குழித்துறை நகராட்சி.

# குழித்துறை நகராட்சி

## குழித்துறை நகர்மன்றத்தின் 31-05-2022 செவ்வாய்க்கிழமை மதியம் 12.30 மணிக்கு நடைபெற்ற அவசரக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

### பொருள் எண்-1

தமிழக அரசால் அமைக்கப்பட்ட சொத்துவரி சீராய்வு செய்வதற்கான குழு பல்வேறு காரணிகளை ஆராய்ந்து தற்போது சொத்துவரி சீராய்வு செய்வது அவசியம் என அரசிற்கு பரிந்துரைத்துள்ளது.

15-வது மத்திய நிதி ஆணையம் 2022-2023-ம்ஆண்டு முதல் உள்ளாட்சி அமைப்புகளுக்கான மான்யம் பெறுவதற்கு, மொத்த ஆண்டு மதிப்பில் சொத்துவரி விகிதம் (Floor rate i.e.Rate of Taxation) எவ்வளவு என அறிவிக்கை வெளியிட வேண்டும் எனவும், மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சிக்கு ஏற்றவாறு சொத்துவரி வசூலில் முன்னேற்றம் காண்பிக்க வேண்டும் எனவும் நிபந்தனைகள் விதித்துள்ளது. மேலும், தூய்மை இந்தியா திட்டம் 2.0 மற்றும் அம்ரூட் 2.0 ஆகிய திட்டங்களுக்கு மானிய நிதி பெறுவதற்கு சொத்துவரி/ காலிமனைவரி சீராய்வு செய்வது அவசியமாகிறது.

அரசாணை (நிலை) எண்.73, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 19-07-2018 மற்றும் அரசாணை (நிலை) எண்.76, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 26-07-2018 ஆகியவற்றில் சொத்துவரி/ காலிமனைவரி பொது சீராய்வு மேற்கொள்ள ஆணையிடப்பட்டு, பின்பு அரசாணை (நிலை) எண்.150 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 19-11-2019-ன்படி சொத்துவரி சீராய்வானது நிறுத்தி வைக்கப்பட்டு, சொத்துவரி/ காலிமனைவரி சீராய்வு மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல்கள் வழங்க குழுவும் அமைக்கப்பட்டது. மேலும், இக்குழுவானது சொத்துவரி/ காலிமனைவரி சீராய்வு செய்வதற்கான பரிந்துரைகள் வழங்குவதற்கு முன்பு, சந்தை மதிப்பு குறியீடு, பணவீக்கம், செலவு பணவீக்க குறியீடு, மொத்த உள்நாட்டு உற்பத்தி போன்றவற்றை பரிசீலித்து, பொருளாதார குறியீடுகள் உயர்ந்துள்ள நிலையில் சொத்துவரியில் எந்த உயர்வும் இல்லாததோடு, உள்ளாட்சி அமைப்புகளின் சொந்த வருமானத்திலும் எந்த உயர்வும் இல்லாமல் உள்ளதாகவும், மொத்த வருமானத்தில் சொந்த வருமானத்தின் பங்கு பெருமளவு குறைந்ததுள்ளதாகவும் அறிக்கை வெளியிட்டுள்ளது.

தற்போது பொருளாதார குறியீடு உயர்ந்துள்ளதற்கு ஏற்ப, நகராட்சிகளின் நிர்வாகச் செலவினம் பலமடங்கு உயர்ந்துள்ளது. மேலும், நகராட்சிகளில் அதிகரித்துள்ள நிதித்தேவை, பொது மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய அடிப்படை வசதிகள், 15-வது மத்திய நிதிக்குழுவின் மான்யம் மற்றும் இதர ஒன்றிய அரசின் திட்டங்களுக்கான நிதி பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள தகுதிகள் போன்றவற்றை கருத்திற்கொண்டும் தமிழ்நாட்டிலுள்ள நகராட்சிகளில் கீழ்கண்டவாறு சொத்துவரி/ காலிமனை வரி சீராய்வு செய்யலாம் என சொத்துவரி சீராய்வு மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல் குழு பரிந்துரைத்துள்ளது.

சொத்துவரி/ காலிமனை வரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் வளர்ச்சிக்கு தேவைப்படும் நிதி ஆகியவற்றை கருத்திற்கொண்டு 2022-2023 முதலாம் அரையாண்டு (01-04-2022) முதல் சொத்துவரி பொது சீராய்வு செய்ய வேண்டும்.

நகராட்சி பகுதிகளில் கட்டப்படும் குடியிருப்பு கட்டடங்களுக்கு அவற்றின் அமைவிடம், கட்டுமானத்தின் தன்மை மற்றும் பயன்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் கட்டடங்களின் பரப்பளவுக்கு ஏற்றவாறு 4 வகைகளாக பிரித்து வெவ்வேறு மண்டல மதிப்புகள் நிர்ணயம் செய்து சொத்துவரி/ காலிமனை வரி சீராய்வு செய்ய வேண்டும்.

சொத்துவரி/ காலிமனை வரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அரசாணை (நிலை) எண்.52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை, நாள் 30-03-2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள் 01-04-2022 ஆகியவற்றில் கீழ்கண்டவாறு அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது.

<u>சொத்துவரி :</u>

<u>குடியிருப்பு கட்டடங்கள் (**Residential Building**)</u> **:**

| **பரப்பளவு (ச.அடி)** | **உயர்வு செய்வதற்கான காரணி** |
|---|---|
| <=600 | 1.25 |
| 601-1200 | 1.5 |
| 1201-1800 | 1.75 |
| >1800 | 2 |

**குடியிருப்பு அல்லாத கட்டடங்கள் (Non-Residential Building) :**

| **வகைப்பாடு** | **உயர்வு செய்வதற்கான காரணி** |
|---|---|
| தொழிற்சாலைகள் | 1.75 |
| வணிக பயன்பாட்டு கட்டடங்கள் | 2 |
| சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்கள் | 1.75 |

**மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்வது சம்மந்தமாக மேற்கண்ட பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள உயர்வு காரணிகள் கீழ்கண்டவாறு விவரிக்கப்படுகிறது.**

1) 600 சதுர அடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டிடங்களுக்கு 25% சொத்துவரி உயர்வு செய்யப்பட வேண்டும்.

2) 601 முதல் 1200 சதுர அடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டிடங்களுக்கு 50% சொத்துவரி உயர்வு செய்யப்பட வேண்டும்.

3) 1201 முதல் 1800 சதுர அடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டிடங்களுக்கு 75% சொத்துவரி உயர்வு செய்யப்பட வேண்டும்.

4) 1800 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டிடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யப்பட வேண்டும்.

5) வணிகப் பயன்பாட்டு கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 100% சொத்துவரி உயர்வு செய்யப்பட வேண்டும்.

6) தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடம் மற்றும் சுய நிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75% சொத்துவரி உயர்வு செய்யப்பட வேண்டும்.

<u>காலிமனை வரி சீராய்வு :</u>

காலிமனை வரிவிதிப்பிற்கு 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு

செய்யப்பட வேண்டும். மேலும், சொத்துவரி விதிப்பு செய்யும் போது கட்டிடத்தின் பரப்பளவிற்கு இரண்டு மடங்கிற்கு மேல் உள்ள காலியிடத்திற்கு சொத்துவரியுடன் சேர்த்து காலிமனைவரி விதிப்பு செய்யப்பட வேண்டும்.

தன்னிச்சையாக வருடாந்திர சொத்துவரி சீராய்வு :

ஏற்கனவே உள்ள சொத்துவரி/ காலிமனை வரியில், ஆண்டுதோறும் 6% உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி/ காலிமனைவரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு செய்யப்பட வேண்டும்.

அதுபோலவே, தற்போது வரை மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்யப்படாமல் விடுபட்டுள்ள சாலைகள், தெருக்கள், சந்துகள் போன்றவை அவற்றின் அமைவிடங்களுக்கு ஏற்றவாறு பட்டியலிட்டு மண்டலங்களும், மண்டல மதிப்புகளும் நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

விலைவாசி உயர்வு, பணியாளர்களின் ஊதிய உயர்வு, பொதுமக்களுக்கு செய்ய வேண்டிய அடிப்படை தேவை மற்றும் நகராட்சியில் ஏற்படுத்தப்பட்டுள்ள அடிப்படை கட்டமைப்புகளை மேம்படுத்தி பராமரிப்பு செய்தல் போன்றவற்றிற்கு தேவைப்படும் கூடுதல் செலவினம், நகராட்சி செலுத்த வேண்டிய கடன் தொகை மற்றும் பிற துறைகளுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத்தொகை ஆகியவற்றை கருத்தில் கொண்டும், பொதுமக்களுக்கு சிறப்பான சேவைகளை அளிக்க ஏதுவாகவும், மேற்கண்ட அரசாணையில் அறிவுறுத்தியுள்ளவாறும், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920, பிரிவு 81-A மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றிக்கை ந.க.எண்.40032/2012/ஆர், நாள் 01-04-2022 ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகள் பின்பற்றியும், குழித்துறை நகராட்சியில் கீழ்கண்டவாறு சொத்துவரி/ காலிமனை வரி உயர்வு செய்து பொது சீராய்வு மேற்கொள்ள பொதுமக்களின் ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபணைகள் 10-05-2022-ம் தேதிக்குள் சமர்ப்பிக்ககோரி 14-04-2022-ம் தேதி தினத்தந்தி நாளிதழ் மற்றும் அலுவலக விளம்பரப் பலகையிலும் விளம்பரம் செய்யப்பட்டது. பொது மக்களிடமிருந்து எவ்வித ஆட்சேபணைகளும் பெறப்படவில்லை என்பதாலும், சொத்துவரி பொது சீராய்வு மேற்கொண்டு 14 வருடங்கள் கடந்த நிலையில், நகராட்சியின் அன்றாட பராமரிப்பு மற்றும் செயல்பாடுகளுக்கான நிதிச் செலவுகளை எதிர்கொள்ளுவதற்கும், நிலுவையிலுள்ள கடன்களை திருப்பி செலுத்தவதற்கும், நகராட்சி நிதி நிலைமையை மேம்படுத்துவது மிக அத்தியாவசியமாகிறது. எனவே அரசாணை எண்.52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 30-03-2022-ன்படி குழித்துறை நகராட்சியில் 01-04-2022 முதல் சொத்துவரி/ காலியிடவரி பொது சீராய்வு மேற்கொள்வதற்கு உயர்வு

செய்ய தீர்மானித்து காரணிகளை ஊர்ஜிதம் செய்யப்படுகிறது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

1) 600 சதுர அடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டிடங்களுக்கு 25% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

2) 601 முதல் 1200 சதுரஅடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டிடங்களுக்கு 50% சொத்துவரி உயர்வு செய்யலாம்..

3) 1201 முதல் 1800 சதுர அடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டிடங்களுக்கு 75% சொத்துவரி உயர்வு செய்யலாம்..

4) 1800 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டிடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யலாம்..

5) வணிகப் பயன்பாட்டு கட்டிடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 100% சொத்துவரி உயர்வு செய்யலாம்..

6) தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடம் மற்றும் சுய நிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டிடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

7) காலிமனை வரிவிதிப்பிற்கு 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யலாம்

8) ஏற்கனவே உள்ள சொத்துவரி/ காலிமனைவரியில், ஆண்டு தோறும் 6% உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத் மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி/ காலிமனை வரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு செய்யலாம்.

<u>அலுவலகக் குறிப்பு.-</u>

1) பொது வரிச்சீராய்வு தொடர்பான மண்டல மதிப்பு உறுதி செய்யலாம்.
2) வரிச்சீராய்வினை நடைமுறைப்படுத்தலாம்.

3) மேற்படி சொத்துவரி, காலிமனைவரி பொது சீராய்வு மேற்கொள்வதற்கும் அறிவிக்கையினை கன்னியாகுமரி மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்ய ஆகும் செலவினம் மற்றும் வரிச்சீராய்வு மேற்கொள்ள ஏற்படும் அனைத்து செலவினங்களும் பொது நிதியில் மேற்கொள்வதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.582/2021/அ1.

மன்றத்தீர்மான எண். 128

**15 நகர்மன்ற உறுப்பினர்கள் வரிஉயர்வுக்கு எதிர்ப்பு தெரிவித்தனர். நகர்மன்ற தலைவர் உட்பட 4 நகர்மன்ற உறுப்பினர்கள் வரிஉயர்வுக்கு ஆதரவு தெரிவித்த நிலையில் பெரும்பாலான உறுப்பினர்கள் எதிர்ப்பு தெரிவித்த காரணத்தினால் வரிசீராய்வு தொடர்பாக அரசின் மறுசீராய்வு தொடர்பாக அரசின் மறு பரிசீலனைக்கு மன்றம் முடிவு செய்து தீர்மானிக்கப்பட்டது.**

ஒப்பம்/- திரு.பொன். ஆசைத்தம்பி
நகர் மன்ற தலைவர்,
குழித்துறை நகராட்சி. ‘

/உண்மை நகல்/

ஆணையாளர்,
குழித்துறை நகராட்சி.